ZURICH **Zurich Life Insurance Malaysia Berhad**
Registration No. 196801000442 (8029-A)

தேத : 1 April 2026

| | | |
|---|---|---|
| விண்ணப்பதாரர் | : | *<பெயர்>* |
| காப்பீடு பெறுபவர் | : | *<பெயர்>* |
| தற்போதைய திட்டம் | : | *<திட்டத்தின் பெயர்>* |
| நிதி ஆலோசகர் | : | *<WP Code> <நிதி ஆலோசகரின் பெயர்>* |
| தொடர்பு எண் | : | *<WP தொடர்பு எண்>* |
| தலைமை முகவர் மேலாளர் | : | *<CAM குறியீடு <CAM பெயர்ர்>* |
| அலுவலகம் / கிளை | : | *<WP கிளை விவரம்>* |




***சிறப்புச் சலுகை: இரண்டாவது மருத்துவ அட்டையுடன் உங்கள் சுகாதாரத் திட்டத்தை மேம்படுத்துங்கள்***

*அன்புள்ள <விண்ணப்பத்தாரரின் பெயர் >,*

*மலேசியா சூரிச் லைஃப் காப்பீட்டு நிறுவனம் சார்பில் மனமார்ந்த வணக்கம்!*

*எங்களது மதிப்புக்குரிய வாடிக்கையாளர்களில் ஒருவரான நீங்கள், மருத்துவக் காப்பீட்டை மேலும் பலப்படுத்தும் ஒரு சிறப்பு வாய்ப்பிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். மருத்துவச் செலவுகள் ஆண்டிதோறும் அதிகரித்து வரும் நிலையில், ஒரே ஒரு மருத்துவ அட்டையால் இன்றைய சுகாதாரச் செலவுகளை முழுமையாகச் சமாளிக்க முடியாது என்பதை மலேசியர்கள் பலரும் உணர்ந்து வருகின்றனர்.*

*உங்களுக்குப் போதுமான பாதுகாப்பை வழங்கும் நோக்கில்,* ***இரண்டாவது மருத்துவ அட்டை உத்தரவாத அனுமதிச் சலுகையை*** *(Second Medical Card Guaranteed Acceptance Offer) அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்தச் சிறப்புச் சலுகைக்கு மருத்துவத் தகுதி மதிப்பீடு தேவையில்லை; மேலும் இது உங்கள் தற்போதைய திட்டத்துக்கு இணையாக செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உங்களுக்குக் கூடுதல் பாதுகாப்பையும் மனஅமைதியையும் வழங்கும் இச்சலுகை 29 ஜூன் 2026 ஆம் தேதி வரை மட்டுமே கிடைக்கும்.*

இப்பிரச்சாரம் உங்களின் முழுமையான பாதுகாப்பை எவ்வாறு பலப்படுத்துகிறது என்பதை கீழே உள்ள விளக்க அட்டவணையைக் கொண்டு பார்ப்போம்:

| **பலன்கள்** | **முதலாம் மருத்துவ அட்டை** | **இரண்டாம் மருத்துவ அட்டை [புதிது]** | **முதலாம் & இரண்டாம் மருத்துவ அட்டை** |
|---|---|---|---|
| | **தற்போதைய திட்டம்** *<திட்டத்தின் பெயர்>* | **சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்ட்** ***< பரிந்துரைக்கப்பட்ட திட்டம்>*** | **மேம்படுத்தப்பட்ட பலன்கள்** |
| முழு ஆயுள் வரம்பு | *<தற்போதைய முழு ஆயுள் திட்ட வரம்பு>* | வரையற்றது | வரையற்றது |
| வருடாந்திர வரம்பு | *<தற்போதைய முழு ஆயுள் திட்ட வரம்பு>* | *<புதிய வருடாந்திர திட்ட வரம்பு>* | முதல் மற்றும் இரண்டாவது அட்டைகளின் மொத்த வருடாந்திர வரம்பு |
| செலுத்த வேண்டியவை | *முதலாம் RM1 தொடங்கி < தற்போதைய வருடாந்திர திட்ட வரம்பு> வரை* | முதன்மை மருத்துவ அட்டையின் வரம்பு *(<தற்போதைய வருடாந்திர திட்ட வரம்பு>)* முழுமையாக பயன்படுத்தப்பட்ட பிறகு, புதிய அட்டையிலிருந்து மீறக்கூடிய தொகை பூர்த்தி செய்யப்பட்ட பிறகு வழங்கப்படும் | |

MEMBER / AHLI PIDM
செலுத்தப்பட வேண்டிய பலன்கள், வரம்புகளுக்கு உட்பட்டு PIDM-ஆல் பாதுகாக்கப்படுகின்றன. மேலும், யூனிட் பகுதியிலிருந்து கிடைக்கும் பலன்களுக்கான பாதுகாப்பு வரம்புகளுக்கு உட்பட்டது. தயவுசெய்து PIDM TIPS கையேட்டைப் பார்க்கவும் அல்லது Zurich Life Insurance Malaysia Berhad அல்லது PIDM-ஐத் தொடர்பு கொள்ளவும் (www.pidm.gov.my என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்).

| | | | |
|---|---|---|---|
| தினசரி அறை மற்றும் உணவுக் கட்டணம் | < தற்போதைய திட்டம் R&B > | < புதிய திட்டம் R&B> | <மொத்தத் திட்டத்தின் R&B> |
| மீறக்கூடிய தொகை / கூட்டுக் காப்பீடு | <தற்போதைய மீறக்கூடிய திட்ட தொகை / கூட்டுக் காப்பீடு> | <பரிந்துரைக்கப்பட்ட மீறக்கூடிய தொகை> | |

*குறிப்பு:*

*i. உங்கள் தற்போதைய மருத்துவத் திட்டம் முதலில் அமலுக்கு வரும். அதன் வருடாந்திர வரம்பு முழுமையாக பயன்படுத்தப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட கழித்தல் தொகை பூர்த்தி செய்யப்பட்ட பிறகு, சூரிச் இன்ஃபினிட் கேர் ஷீல்ட் திட்டம் மீதமுள்ள தகுதியான மருத்துவச் செலவுகளைக் காப்பளிக்கும்.*

*ii. பொருந்தும் இடங்களில் முன்பிருந்த விதிமுறைகள் பயன்படுத்தப்படும்.*

*iii. மேலும் தகவல் அல்லது உதவி தேவையெனில், உங்கள் நிதி ஆலோசகர் அல்லது எங்கள் வாடிக்கையாளர் சேவை உதவி எண்ணைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

மாதத்திற்கு RM150 முதல் தொடங்கி, மேலும் வலுவான மற்றும் முழுமையான பாதுகாப்புடன் நிறைவான மனநிம்மதியை நீங்கள் பெறலாம். இந்தச் சிறப்புச் சலுகை குறுகிய காலத்திற்கு மட்டுமே வழங்கப்படுகிறது; ஆகையால், உங்கள் சுகாதாரப் பாதுகாப்பை மேம்படுத்தும் இவ்வாய்ப்பினை நழுவ விடாதீர்.*

**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.*

மேலும் தகவல்களுக்கு, இணைப்பு 1 ,கேள்வி- பதில் (FAQ) பகுதியைப் பார்க்கவும். இந்தக் கடிதத்தின் உள்ளடக்கம் மற்றும் FAQ-களைச் சீனம் மற்றும் தமிழில் காண, <Campaign Page URL>ஐப் பார்வையிடவும். எந்தவொரு விதிமுறை அல்லது நிபந்தனையின் விளக்கத்தில் முரண்பாடு அல்லது தெளிவின்மை ஏற்பட்டால், ஆங்கில பதிப்பு அமல்படுத்தப்படும்.

**இப்போதே செயல்படுங்கள்!**

இந்தச் சலுகையில் உங்களுக்கு ஆர்வம் இருந்தால், தயவுசெய்து இணைக்கப்பட்டுள்ள பதில் சீட்டினைப் பூர்த்தி செய்து, 29 ஜூன் 2026 ஆம் தேதிக்குள் திருப்பி அனுப்பவும். உதவி தேவைப்பட்டால், எங்கள் வாடிக்கையாளர் சேவை உதவி எண்ணான 1-300-888-622-ஐத் தொடர்பு கொள்ளவும் அல்லது callcentre@zurich.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்குக் கடிதம் எழுதவும். மேலும், உங்கள் நிதி ஆலோசகரைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது அருகிலுள்ள மலேசியா சூரிச் லைஃப் காப்பீட்டு நிறுவன கிளையை அணுகவும்.

உங்கள் வாழ்வில் முக்கியமானவற்றைப் பாதுகாக்க எங்களைத் தேர்ந்தெடுத்ததற்கு நன்றி.

தங்கள் உண்மையுள்ள,
மலேசியா சூரிச் லைஃப் காப்பீட்டு நிறுவனம்



**பதில் சீட்டு**

## சூரிச் இரண்டாம் மருத்துவ அட்டையின் உறுதியான ஒப்புதல் பிரச்சாரம்

| | | |
|---|---|---|
| **தற்போதைய பாலிசி எண்** | : | [#] |
| **காப்பீடு பெறுபவர்** | : | [காப்பீடு செய்யப்பட்ட நபர் அல்லது சார்ந்த நபரின் பெயர். ஒருவருக்கு ஒரு சீட்டு] |
| **உரிமையாளர்** | : | [விண்ணப்பதாரரின் பெயர்] |
| **தற்போதைய மருத்துவ திட்டம்** | : | ["மருத்துவ ரைடர் பெயர்". "மருத்துவ ரைடர் பெயர்" இல்லையெனில் "அடிப்படைத் திட்டத்தின் பெயர்"] |

**உறுதிமொழி:**

இந்தப் பிரச்சாரத்தின் கீழ், சூரிச் வேல்யுலைஃப் (ValueLife) மற்றும் சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்ட் ரைடரின் (InfiniteCare Shield Rider) புதிய பாலிசிக்கு விண்ணப்பிப்பதன் மூலம், கீழ்க்கண்டவற்றை நான் புரிந்து கொண்டு ஒப்புக்கொள்கிறேன்:

(a) மேற்காணும் காப்பீடு செய்யப்பட்ட நபருக்கான ஒரே விண்ணப்பம் இது. புதிய காப்பீட்டு விண்ணப்பம் ஒப்புதல் பெறும் போது, தற்போதைய பாலிசி செயல்பாட்டில் இருக்க வேண்டும்.

(b) முன்பு உள்ள குறைபாடுகள், கூடுதல் கட்டணங்கள் அல்லது விதிமுறைகள், தற்போதைய கொள்கையில் பொருந்தியிருந்தால், இந்தப் பிரச்சாரத்தில் அங்கீகாரம் பெறும் இவை புதிய கொள்கைக்கும் பொருந்தும். அவ்வாறு பொருந்துமானால், வேலை சார்ந்த கூடுதல் கட்டணம் புதிய கொள்கைக்காக வழங்கிய சமீபத்திய தொழில் தகவலின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

(c) தற்போதைய கொள்கையில், விலக்கப்பட்ட எந்த மருத்துவ அல்லது உடல் நிலைகளுக்கும், புதிய கொள்கையின் கீழ் எந்த நன்மையும் வழங்கப்படமாட்டாது; புதிய கொள்கை அனுமதிப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட அந்த விதிவிலக்குகளும் இதற்குள் சேரும்.

(d) புதிய கொள்கையில் இணைக்கப்பட்டுள்ள சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்ட் ரைடரின் கீழ், எந்த முன்னிருந்துள்ள நிபந்தனைக்கும் தொடர்புடைய நன்மையும் கொடுக்கப்படமாட்டாது.
   (i) சர்க்கரை நோய் ;
   (ii) முதுகெலும்பு குறைபாடு ; அல்லது
   (iii) சூரிச் மூலம் அடையாளம் காணப்பட்ட 49 முக்கிய நோய்கள் .

   மேலே குறிப்பிட்ட நிலைகளுடன் தொடர்பற்ற முன்னர் உள்ள நிலைகள், புதிய கொள்கையின் கீழ் 3 முழு கொள்கை ஆண்டுகளுக்குப் பிறகே கோரிக்கைக்கு உட்படுத்தப்படும்.

(e) புதிய கொள்கையின் கீழ் வழங்கப்படும் இறப்பு மற்றும் நிரந்தர ஊனமுற்ற நிலை பலன் (TPD Benefit) , முதல் மூன்று (3) கொள்கை ஆண்டுகளில் விபத்து அல்லாத காரணங்களால் ஏற்படும் இறப்பு அல்லது நிரந்தர ஊனமுற்ற நிலைக்கு வழங்கப்படமாட்டாது.

(f) விண்ணப்பத்தின் போது தெரிவிக்கப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், எந்தவொரு உடல்நிலை அல்லது நோயும் புதிய கொள்கையின் கீழ் முன்பே இருந்த உடல்நிலை அல்லது நோயாகக் கருதப்படும்.

(g) புதிய பாலிசி காலாவதியானால், கடைசி காப்பீட்டுக் கட்டணம் செலுத்த வேண்டிய அடுத்த தேதியிலிருந்து 1 வருடத்திற்குள், உடல்நலம் சார்ந்த காப்பீட்டுத் தகுதிச் சான்று இல்லாமலேயே அதை மீண்டும் செயல்படுத்தலாம். புதிய பாலிசியில் குறிப்பிடப்பட்டுள்ள, மீண்டும் செயல்படுத்துவதற்கான கோரிக்கைக்கான மற்ற விதிமுறைகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடரும்.

நான் மேலும் இதை புரிந்துகொள்கிறேன்:

(a) தற்போதைய கொள்கையில் பொருந்தும் காத்திருப்புக் காலங்கள் அனைத்தும் ஏற்கனவே நிறைவு பெற்றிருந்தால், சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்ட் ரைடருக்கான காத்திருப்புக் காலங்கள் விலக்கப்படும். தற்போதைய கொள்கையின் கீழ் காத்திருப்புக் காலம் இன்னும் முடிவடையாதிருந்தால், மீதமுள்ள காத்திருப்புக் காலம் தொடர்ந்து அமலில் இருக்கும்.

(b) புதிய கொள்கை வெளியிடலுக்குப் பின், கொள்கை பலனில் ஏதேனும் மாற்றம் நிகழ்ந்தால், இந்தப் பிரச்சாரச் சலுகைச் செல்லாததாக அறியப்படும்.

(c) *புதிய கொள்கையின் கீழ் சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்ட் ரைடருக்கான முதலாம் ரைடர் ஆண்டு (Rider Year) குறித்து:*

(i) *மீறக்கூடிய தொகையைக் கணக்கிட தொடங்கும் தேதி, தற்போதைய மருத்துவ ஆண்டு நிறைவு நாளிலிருந்து அதிகபட்சம் 12 மாதங்கள் பின்பற்றியே தொடங்கும். முதலாம் ரைடர் ஆண்டு (Rider Year) தற்போதைய மருத்துவக் கொள்கையின் அடுத்த ஆண்டு நிறைவு நாள் வரை தொடரும்.*

(ii) *ஆண்டு நிறைவு வரம்பின் கணக்கீடு, சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்ட் ரைடர் தொடங்கும் நாளிலிருந்து தற்போதைய மருத்துவக் கொள்கையின் அடுத்த ஆண்டு நிறைவு வரை நடைபெறும். மீறக்கூடிய தொகை மற்றும் வருடாந்திர வரம்பில் எந்த மாற்றமும் நிகழாது.*

(d) *புதிய கொள்கையின் கீழ் சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்ட் ரைடரின் அடுத்த ரைடர் ஆண்டு நிறைவு நாள்கள், மீறக்கூடிய தொகை மற்றும் ஆண்டு நிறைவு வரம்புக் கணக்கீட்டிற்காக ஒவ்வொரு ரைடர் ஆண்டின் ["மருத்துவ ரைடரின் தொடக்க தேதி" (DD/MMM); காலியாக இருந்தால் "செயல்படுத்தும் தேதி"] அடிப்படையில் நிர்ணயிக்கப்படும்.*

____________________________ ____________________________

| | |
|---|---|
| *உரிமையாளர்/ஒப்படைக்கபட்டவரின் கையொப்பம்* | *சாட்சியின் கையொப்பம்* |
| *பெயர் :* | *பெயர் :* |
| *அடையாள அட்டை எண் :* | *அடையாள அட்டை எண் :* |
| *தேதி :* | *தேதி :* |